# பெரும்பூனைகள்









உலகத்தமிழ்க் கல்விக்கழகம்

www.worldtamilacademy.com

# பெரும்பூனைகள்

உலகத்தமிழ்க் கல்விக்கழகம்

www.worldtamilacademy.com

# பெரும்பூனைகள்

உலகில் மொத்தம் 38 வகையான பூனை இனங்கள் உள்ளன. “ஃபெலிடே” (Felidae) என்று அழைக்கப்படும் இக்குடும்பத்தில் உள்ள பெரும் பூனைகள்(big cats) “பாந்தரா” (Panthera) என்ற பேரினத்தைச் சார்ந்தவை. பூனை இனங்கள் அனைத்துமே மாமிச உண்ணிகள். இவை வேட்டையாடுதல் மற்றும் விளையாட்டுக் குணம் உடையவை. இவற்றுக்கு இரவு நேரங்களில் பார்வைத் திறன் துள்ளியமாக இருக்கும். இவை 16 முதல் 20 மணி நேரம் தூங்கக் கூடியவை. பெரும்பூனைகள் பெரும்பாலும் இரவில் வேட்டையாடும் தன்மை கொண்டவை.




மாமிச உண்ணிகள்

பூனைக் குடும்பத்தைச் சேர்ந்த புலி, சிங்கம், சிறுத்தைப் புலி, சிவிங்கிப் புலி, சிறுத்தை, பனிச் சிறுத்தை ஆகியவை பெரும்பூனை இனமாகும். பெரும்பூனைகளை அதன் உடலமைப்பு, நிறம், அளவு மற்றும் தோலின் வடிவமைப்பினைக் கொண்டு அவற்றின் வேறுபாடுகளை அறியலாம். பெரும்பூனை இனங்களில் புலியே (Pantheratigris) பெரியது. அதிலும் சைபீரியன் புலி (Siberian Tiger) மிகப் பெரியது. ஆப்பிரிக்கா, ஆசியா, மத்திய அமெரிக்கா மற்றும் தென் அமெரிக்கா போன்ற இடங்களில் பெரும்பூனைகள் அதிகம் காணப்படுகின்றன. சிங்கம் பசித்தால் மட்டுமே வேட்டையாடக் கூடியது, ஆனால் புலி எப்போதுமே வேட்டையாடும்.



சைபீரியன் புலி (Siberian Tiger)

மரங்கள் நிறைந்த அடர்த்தியான வனப் பகுதிகளில் புலிகள் அதிகம் காணப்படும். புலிகள் 27 கிலோ எடையுள்ள கறியை ஒரே நாளில் சாப்பிடக் கூடியவை. தூய்மையை விரும்பும் சுத்தமான விலங்கு புலி. மாமிச உணவுகளை உண்ட பின் நீரைத் தேடிச் சென்று அதன் நாக்கு, கை, கால்களை நன்றாகச் சுத்தம் செய்யும். புலிகள் எல்லா விதமான பருவ காலங்களையும் ஏற்று வாழக் கூடியவை.




மரங்கள் நிறைந்த வனப்பகுதி




புலி நீரில் நீந்தும் காட்சி



கால்



நாக்கு



கை



பெரும்பூனை இனங்களில் சிங்கம் மட்டுமே கூட்டமாக வாழக் கூடியது. சிங்கம் வேட்டையாடிய இரையை முழுவதுமாக உண்ணாமல் எலும்பையொட்டிய சதைப் பகுதிகளை அப்படியே விட்டுவிடும்.



ஆண் சிங்கம்

பெண் சிங்கங்கள் வேட்டையாடி இரையைக் கொண்டு வரும். ஆண் சிங்கங்கள் இரவு நேரங்களிலேயே வேட்டையாடும்.

பெரும்பூனை இனங்களில் சிறுத்தைப் புலியின் (ஜாகுவார்) சிறப்பே அதன் பற்கள் தான். சிறுத்தைப் புலி இரையை வேட்டையாடும் பொழுது விலங்குகளின் காதுகளுக்கு இடையில் உள்ள மண்டையோட்டை நேரடியாகக் கடிப்பதன் மூலம் மூளைக்குள் அதன் பற்களை நேரடியாகச் செலுத்தி ஒரே கடியில் உயிரைப் போக்கும் திறன் கொண்டது. ஜாகுவார், சிறுத்தைகளை விடச் சற்றுப் பெரியது.




ஜாகுவார்



பற்கள்

சிறுத்தைப் புலியைப் போலவே மலை சிங்கம் (பூமா கான்கலர்) எனும் பெரும்பூனை அதன் வலுவான பற்களைக் கொண்டு மற்ற விலங்குகளின் தோலில் எளிதாக கீறல்களை ஏற்படுத்தி திசுக்களைக் கிழித்து எலும்புகளை உடைக்கக் கூடியது.

பெரும்பூனை இனங்களில் மற்ற விலங்குகளுடன் ஒப்பிடுகையில் சிறுத்தை சிறிய கால்களையும், நீண்ட உடலையும் கொண்டிருக்கும். தோற்ற அமைப்பில் ஜாகுவாரை ஒத்ததாக இருக்கும். கருப்பு நிறத்தில் இருக்கக் கூடிய சிறுத்தைகளையும் ஜாகுவார்களையும் கருஞ்சிறுத்தைகள் (Black panthers) என்பர். அதிக எடையுடைய இரையையும் தூக்கிக் கொண்டு மரங்களில் ஏறக் கூடிய ஆற்றலுடையது சிறுத்தை. பெரும்பூனைக் குடும்பத்தில் மட்டுமல்லாமல் நிலத்தில் வாழும் உயிரினங்களில் வேகமாக ஓடக் கூடிய விலங்கு சிவிங்கிப் புலி. சிறுத்தையைப் போன்றே சிவிங்கிப் புலியும் மரத்தில் ஏறக் கூடிய தன்மையுடையது.



கருஞ்சிறுத்தைகள் (Black panthers)




பனிச்சிறுத்தை

பனிச்சிறுத்தைகள் மற்ற பெரிய பூனைகளை விட சிறியதாக உள்ளன. இவை உறுமுவதில்லை. தனித்து வாழும் இயல்புடையவை.

பனிச்சிறுத்தைகள் பனி, மலைச்சூழலில் வாழ்வதற்கேற்ப அடர்த்தியான ரோமங்களைப் பெற்றுள்ளது. இவற்றின் வால் நீளமாக இருக்கும். இவை தூங்கும் போது, வாலால் முகத்தை மறைத்துக் கொள்கின்றன. பெரும்பூனைகளில் சிறுத்தைகள் உறுமல் ஒலி எழுப்புவதில்லை. அதற்கு மாற்றாக வேடிக்கையாக மியாவ் ஒலி, புலம்பல் போன்ற ஒலிகளை எழுப்புகின்றன.



நீளமான வால்



## பெரிய பெரும்பூனைகள் :-

| பெரும் பூனைகள் | அறிவியல் பெயர் | வாழ்விடங்கள் | எடை (கி.கி) |
|---|---|---|---|
| புலி | பாந்தரா டைகரிஸ் *(Panthera tigris)* | ஆசியா | 90-300 |
| சிங்கம் | பாந்தரா லியோ *(Panthera Leo)* | ஆப்பிரிக்கா, தென்கிழக்கு ஐரோப்பா, ஆசியாவின் பல பகுதிகள் | 160-250 |
| சிறுத்தைப் புலி (ஜாகுவார்) | பாந்தரா ஓங்கா *(Panthera onca)* | தெற்கு மற்றும் மத்திய அமெரிக்கா | 56-130 |
| சிறுத்தை | பாந்தரா பார்டஸ் (*Panthera pardus)* | ஆசியா, ஆப்பிரிக்கா | 30-90 |
| பனிச்சிறுத்தை | பாந்தரா அன்சியா (Panthera uncia) | மத்திய ஆசியா முதல் தென் ஆசியா வரையான மலைப்பகுதிகள் | 22-55 |

பெரும்பூனையினங்கள் , பன்னாட்டு இயற்கைப் பாதுகாப்புச் சங்கம் (International Union for Conservation of Nature - IUCN) வெளியிட்டுள்ள சிவப்புப் பட்டியலில் அழிந்து போகக் கூடியவை என வகைப்படுத்தப்பட்டுள்ளன. வாழ்விட அழிவு, விலங்குகளை வேட்டையாடுதல், காலநிலை மாற்றம் போன்ற காரணங்களால் இவற்றின் எண்ணிக்கை குறைந்து வருகிறது. இயற்கையைக் காக்க, விலங்குகளை அழிவிலிருந்து காப்பது நம் கடமையாகும்.

பன்னாட்டு இயற்கைப் பாதுகாப்புச் சங்கம்



**உலகத்தமிழ்க் கல்விக்கழகம்**

www.worldtamilacademy.com